தனி இதழ் ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சந்தா விபரம் உள்நாடு (இலங்கை உட்பட) ஆண்டு ரூ. 24—0—0 6 மாதம் ரூ. 12—0—0 3 மாதம் ரூ. 6—0—0
மலர் 1] [இதழ் 143	வெளிநாடு: ஆண்டு ரூ. 30—0—0 6 மாதம் ரூ. 15—0—0 3 மாதம் ரூ. 7—8—0

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சென்னை: கார்த்திகை 12உ வெள்ளி (27—11—53) * * * வெளியீடு: கார்த்திகை 13உ சனி (28—11—53)

"வீட்டு வாடகையை உயர்த்தாதே!"

— (:) —

பொன்மலை இரயில்வே தொழிலாளர் கொந்தளிப்பு!

வாடகையை உயர்த்தும் யூனியன் சர்க்கார் முடிவுக்கு எதிர்ப்பு

அரை மணி நேர அடையாள வேலைநிறுத்தம்

பொன்மலை, நவ. 26—

ரயில்வே காலனியிலுள்ள வீடுகளுக்கு வாடகையை, முன்பிருந்ததைவிட, ஆறு மடங்குவரை உயர்த்துவது என்ற ரயில்வே போர்டின் உத்தரவைக் கண்டித்து, பொன்மலையிலுள்ள தென்பகுதி ரயில்வேமென் யூனியன், லேபர் யூனியன், ஒர்க்கர்ஸ் யூனியன், எம்ப்ளாயிஸ் யூனியன் முதலிய தொழிற் சங்கங்களின், ஒருமித்த முயற்சியினால் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, இன்று 26—11—53 காலை 7-30 மணிக்கு, அரை மணி நேரம் தொழிற்சாலை வாயிலில் தாமதித்து தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றனர்.

பொன்மலை தொழிற்சாலை வாயிலில் போலீஸ் பந்தோபஸ்தும், அதிகாரிகளும் நின்றிருந்தனர். தொழிலாளர்கள் இன்று, "வீட்டு வாடகையை உயர்த்தாதே" என்ற அட்டைகளை ('பாட்ஜ்') அணிந்துகொண்டு, தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தனர்.

மாலை 5 மணிக்கு தொழிற்சாலை விட்டதும், எல்லா தொழிலாளரும், ஒரே கேட் (ஜிம்னி) வழியாக அணிவகுத்து, வ. உ. சி. திடலை அடைந்ததும், தோழர் வாசுதேவன் அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதசமயம், தோழர்கள் புருஷோத்தமன், இராகவானந்தம், சீனிவாசன், பி. ராமன் முதலியோர், வீட்டு வாடகையை, ரயில்வே போர்டு உயர்த்தியுள்ளதைக் கண்டித்தும், உடனே அதை வாபஸ் வாங்க வேண்டுமென்றும், மிக விரிவாக சொற்பொழி வாற்றினர்.

கூட்டத்தில் சங்கப் பாகுபாடு, கட்சி வேற்றுமை இன்றி எல்லாத் தொழிலாளர்களும் சுமார் 8,000 பேர் கட்டுப்பாடாகக் கலந்துகொண்டது மிகமிகக் குறிப்பிடத்தக்கது. (ந. நி)

லண்டன் பொதுவுடைமைக் கட்சி செயலாளர்

இலங்கையைப் பார்வையிட கோத்தலவாலா மறுப்பு

கொழும்பு, நவ 24—

பிரிட்டன் பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் ஹாரிபொல்லிட், இலங்கை வர இலங்கை அரசாங்கம் அனுமதிக்காதென இன்று இலங்கை தலைமை அமைச்சர் ஜான் கொத்தலவாலா கூறினர்.

பொல்லிட், இந்தியாவையும் இலங்கையையும் பார்வையிட இவ்வாரம் லண்டனிலிருந்து கப்பல் மூலம் புறப்படுவதாக இருக்கிறார்.

இவர் இலங்கை வருவது குறித்து ஜான் கொத்தலவாலா தெரிவித்ததாவது:—

'நாம் முன்னமே ஏராளமான பொதுவுடைமையாளரைப் பெற்றிருக்கிறோம்; இனி எவரும் வெளிநாட்டிலிருந்து வரவேண்டியதில்லை; ஆகவே பொல்லிட்டை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டேன்."

* * * * * * * * * * *

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

*

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 4659-4-5

* * * * * * * * * * *

4 வல்லரசு மாநாடு

ரஷ்யா கலந்துகொள்ளும்?

நான்கு வல்லரசு மாநாட்டில், பங்குகொள்ளுவதற்குள்ள தம் விருப்பத்தை சோவியத் ரஷ்யா வல்லரசுகளிடம் சேர்ப்பித்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

'தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கவும்'

'நாட்டின் அமைதிக்கு அதுவே சிறந்த வழி'

பாராளுமன்ற உறுப்பினர் பேபி கந்தசாமியின் கோரிக்கை

ஓமலூர், நவ 25—

"இந்த நாட்டின் அமைதியை நிலைநாட்டி, மக்களுக்கு அரசாங்கத்தாரிடத்தில் நம்பிக்கை உண்டாகவும், மக்களது உரிமைகள் பறிக்கப்படாமல் காப்பாற்றப்படும் என்ற உறுதி தரவும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ்பெற்று, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை உடனே விடுதலை செய்யுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்."

—என, திருச்செங்கோடு பார்லிமெண்டு உறுப்பினர் தோழர் எஸ். கே. பேபி கந்தசாமி அவர்கள் 8—11—53-ல், மேற்கண்ட கோரிக்கையை, ஆச்சாரியார் அவர்களிடமும், கவர்னர் பிரகாசா விடமும் அளித்துள்ளார்.

"போர்ச்சுகீசியருக்கு உடந்தையாக இருந்தவர்கள் பார்ப்பனர்களே!"

அன்னியனுடன் சேர்ந்துகொண்டு பீஜபூர் மன்னர்களைக் காட்டிக் கொடுத்தனர்!

திருச்சியில் கூடிய பார்ப்பன மக்களுக்குக் காணிக்கை

பம்பாய், நவ. 25—

"கோவாவை, போர்ச்சுகீசியர் அப்படி ஒன்றும் திரும்ப வென்று விடவில்லை என்பது சரித்திரம் படித்த எல்லோருக்கும் தெரியும்."

"துரத்தியடிக்கப்பட்ட போர்ச்சுகீசியர், ஒரு சில பிராமண சதிகாரர்களின் வஞ்சக செய்கையால்தான் திரும்ப உள்ளே பிரவேசித்துவிட்டார்கள்."

"பீஜபூர் மன்னர்களைத் தோற்கடிப்பதற்காக, அவர்கள் அந்நியருடன் சேர்ந்து கொண்டார்கள்"

என்று, பம்பாயிலுள்ள கோவா மக்கள் கட்சி காரியதரிசியான தோழர் ஜார்ஜ்வாஸ் விடுத்துள்ள அறிக்கையில், குறிப்பிட்டுள்ளார். மேலும், அவ்வறிக்கை கூறுவதாவது:—

"போர்ச்சுகீசியர் வெளியேறியாக வேண்டும். இந்திய மண்ணில் கோவா 'மீட்சி தினம்' கொண்டாடும்படி அவர்களை விட்டுக் கொண்டிருக்க மானமுள்ள எந்த இந்தியரும் சகிக்க மாட்டான்."

கோவா தேசிய காங்கிரஸ், இன்று காலை, பம்பாயிலுள்ள போர்ச்சுகல் கான்சல்-ஜெனரல் காரியாலயத்தின் முன்பு பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

போர்ச்சுகலிலும், அதன் காலனி பகுதிகளிலும் இன்று கோவா "மீட்சி தினம்" கொண்டாடப்படுவதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கோவா தேசிய காங்கிரஸ் தலைவர் தோழர் பீட்டர் ஆல்வாரிஸ், இந்த ஆர்ப்பாட்டத்தை தலைமை தாங்கி நடத்தினர். "கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறு" என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மைசூர்காரர்களுக்கே சலுகை!

★

ஹாஸ்பட், நவ. 24—

துங்கபத்திரா அணை பகுதியில் வேலை செய்தவரும் தமிழர்களை சென்னைக்கு அனுப்பி விட்டு அவர்களுக்குப் பதில் மைசூர் சர்க்கார் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதென இங்கு நடைபெற்ற துங்கபத்திரா அணை நிர்வாக போர்டு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

'நான் ஒரு கல்நெஞ்சன்!'

——: 0 :——

"எனக்கு இளகிய மனமே கிடையாது!"

"பிறர் கஷ்டத்தைக் கண்டு கண்ணீர் விடாதீர்கள்!"

'இதுதான் சாஸ்திரம்! ராஜதந்திரம்!'

'பொதுஜன கருத்துக்கு அக்கரை காட்டாதீர்!'

கோழிக்கோடு, நவ. 26—

"சத்தியத்திற்கு உழைத்து, நாட்டின் நலத்திலேயே அக்கரை செலுத்த விரும்பினால், போட்டிகளுக்கு இடமில்லை. அதனால்தான், பொதுஜன அபிப்பிராயத்தில் அக்கரை காட்ட வேண்டாமென காங்கிரஸ்காரர்களுக்குக் கூறுகிறேன். சத்தியத்திலேயே அவர்கள் அக்கரை கொள்ள வேண்டும்."

"கம்யூனிஸ்டுகளிடம் நான் ரொம்பவும் இளகிய மனதுடன் நடந்துகொள்வதாகக் கூறுகிறார்கள். எனக்கு இளகிய மனமே கிடையாது. நான் ஒரு கல் நெஞ்சன். கல் நெஞ்சனாக இருந்திராவிட்டால் காங்கிரசில் சேர்ந்திருக்கமாட்டேன். என் மனைவி மக்களைக் கவனித்துக் கொண்டிருப்பேன்."

"காங்கிரஸ்காரர்கள் இளகிய மனம் கொண்டவர்களாக இருக்கக்கூடாது. நியாயத்தை உணர்ந்து மக்களுக்கு உதவி புரியவேண்டும். கஷ்டத்தைக் கண்டு கண்ணீர் விடாதீர்கள். யாராவது தவறு செய்தால், அதை அவர்கள் உணரும்படி செய்யுங்கள். இதுதான் சாஸ்திரம்—ராஜதந்திரமும்கூட."

"நமக்கு நிர்வாக அனுபவம் அதிகம் போதாது. பொறுப்பு ஏற்கத் திறமை படைத்திருப்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்; அதனால் எவரையும் நாம் இழக்க முடியாது. நமது பழைய

(8-ம் பக்கம் பார்க்க)

ஐவர் சிறையில்! இன்றுடன் 88-வது நாள்

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை '27—11—1953 வெள்ளி

என்ன அவசியம்?

இந்திய சர்க்கார், மாநில சர்க்கார் ஆகிய இரு சர்க்கார்களும், தங்களுடைய சிப்பந்தி ஊழியர்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கும் குடியிருப்புகள் மிகமிக மோசமான நிலையில் உள்ளவைகள் என்பதை நாம் விளக்கத் தேவை இல்லை.

குடியிருப்புத் துறையில் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு சர்க்கார் செய்துள்ள வசதியும், காட்டும் சலுகையும், சாதாரண, ஆனால், இன்றியமையாத ஊழியர்களுக்கு செய்து கொடுப்பது கிடையாது என்பதை அனைவரும் அறிவர். அதிக ஊதியம் பெறுகிறவர்களுக்கு அதிகமான வசதியும், குறைவான சம்பளம் பெறுகிறவர்களுக்கு குறைவான வசதியும் உடைய குடியிருப்பைத்தான் சர்க்கார் ஞாயம் என்று கருதிக் கொண்டு இருக்கிறதுஎன்பதை, சர்க்காரின் நடைமுறையிலிருந்தே அனைவரும் தெரிந்து கொண்டிருக்கும் உண்மையாகும்.

எடுத்துக்காட்டாக வேண்டுமானால், மாநில சர்க்கார் போலீஸ் துறையினருக்குச் செய்து கொடுத்திருக்கிற வீட்டு வசதி, நாகரிகமான மக்கள் சாதாரண சுகத்தை அனுபவிப்பதற்குக்கூட அருகதை அற்றுக் கிடப்பதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்த வகையான தொத்து நோய் கிடங்கு வசதியும், எல்லாப் போலீஸ் படையினருக்கும் கிடைத்திருக்கிறது என்றும் சொல்வதற்கில்லை. இத்துறையைப் பொறுத்த வரையில், போலீஸ் படையினருக்குக் கிடைத்திருக்கும் அரசியல் விடுதலையை சுயராஜ்யம் என்றோ, சுகராஜ்யம் என்றோ எந்த ஒரு போலீஸ் சிப்பாயும் சொல்ல முன்வர மாட்டார். ஏதோ, தங்கள் துறையைச் சேர்ந்த சிலருக்காவது, இந்தக் கேடான இருப்பிடமாவது கிடைத்திருக்கிறதே என்றுதான், அது கிடைக்காத மற்ற போலீஸ் துறையினர் திருப்திபட வேண்டும். வேறு என்ன செய்வது? நிற்க,

தென்னிந்திய ரயில்வே முக்கியத் தொழிற்சாலை இடமான பொன்மலையில், அங்குள்ள தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, குடியிருப்பதற்காக, வீடுகள் இந்திய சர்க்காரால் கட்டித் தரப்பட்டு இருக்கின்றன. அந்த வீடுகளில் தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் குடி இருந்து வருகின்றனர். இனாமாக அல்ல. தாங்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு, தகுதிக்கு ஏற்றாற் போல் வாடகையை மாதா மாதம் தொழிலாளர்கள் கொடுத்துவிட்டுத்தான், அவ்வீடுகளில் குடி இருக்கவேண்டும். தொழிலாளர்களுடைய வருமான நிலையையும், முக்கியமாகத் தேவைப்படும் உணவுப் பொருட்களின் விலையையும் ஒப்பவைத்து நோக்கும் பொழுது, தொழிலாளர்கள் விஷயத்தில் யூனியன் சர்க்கார் தாராளமாக நடந்து கொள்ளுகிறது எனறு, மானங்கெட்ட சர்க்கார் தாசர்களைத் தவிர, நியாய புத்தி படைத்த— மனித உள்ளம் படைத்த எவரும் கூற முன்வர மாட்டார்கள்.

உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்கவோ, உடையின் விலையைக் குறைத்துக் கட்டுப்படுத்தவோ, சக்தியற்ற யூனியன் சர்க்கார், தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தைக் கூட்டித்தர முன்வருவதுதான் நேர்மையாகும். ஆனால், இந்த நல்ல நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ள முன்வராத சர்க்கார், பொன்மலை தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு வாடகையை உயர்த்த முன்வந்து இருக்கிறது, விந்தையாகத்தான் இருக்கிறது.

இப்போதுள்ள வாடகையைக் காட்டிலும் ஆறு மடங்கு வரை உயர்த்த வேண்டும் என்று 'ரயில்வே போர்ட்' தீர்மானித்து இருக்கிறதாம். அதை அமுல் நடத்தவும் முனைந்து விட்டது. இந்த அக்கிரமப் போக்கை, தொழிலாளர்கள் ஒருமித்து ஒற்றுமையாக எதிர்க்க முற்பட்டு இருக்கின்றனர் என்று அறிகிறோம். கட்சிப் பாகுபாடு கருதாமல் ஒரே அணியில் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு எதிர்ப்புச் செய்திருப்பதைக் கண்டு நாம், அவர்களைப் பாராட்டுகிறோம்.

அரை மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்ததாகவும், நமது நிருபர் அறிவித்துள்ள செய்தியை மற்றோர் இடத்தில் வெளியிட்டு இருக்கிறோம். இந்த அடையாள வேலை நிறுத்தத்தை, தொழிலாளர்களின் உளக்கிடக்கையையும், போராட்ட உறுதியையும் எடுத்துக்காட்டும் அறிவிப்பாக யூனியன் சர்க்கார் கொள்ளவேண்டுமே யல்லாது, போலீஸ் படை இருக்கிறது என்ற வரட்டு அகங்காரத்தில் நடந்துகொள்ளக் கூடாது என்று எச்சரிக்கின்றோம், முழு விவரமும் கிடைத்த உடன் இதுபற்றி விரிவாகவும், விளக்கமாகவும் எழுதுவோம் என்று கூறிக்கொண்டு, பிளவுபடாமல் ஒற்றுமையாகக் கோரிக்கையைப் பெற முனைந்துள்ள தொழிலாளர் மக்களை மீண்டும் பாராட்டி இதை முடிக்கிறோம்.

சி. ஆர். ஆட்சியின் அலங்கோலம்!

'யோக்கியதை'யைப் பற்றிப் பேச யோக்கியதை ஏது?

காரைக்குடி சம்பவம்: ஏ. கோவிந்தசாமி அறிக்கை

காரைக்குடி, நவ. 24—

கடந்த திங்கள் காரைக்குடியில் 18—10—53 அன்று கல்லக்குடி அறப்போர் வீரர் தோழர் இராம—சுப்பையா அவர்களுக்கு நடந்த பாராட்டுக் கூட்டத்தில், நான் ஆச்சாரியார் சர்க்காரின் அடக்குமுறை தர்பாரைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், காங்கிரஸ் காலிகள் இருவர் "எங்கள் ராஜாஜியைப் பற்றிப் பேசாதே. பேசினால், கலகம் செய்வோம்," என்று குழப்பம் செய்தனர்.

அதுபொழுது நான் பொது மக்களிடம், அக்காலிகளின் செயல்களை விளக்கிக் காட்டி, 'கண்ணியமான முறையிலே, கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்; ஆத்திரப்படாமல் கேட்கட்டும்; ஆச்சாரியாரின் அலங்கோலமான ஆட்சியை, எடுத்துக் கூறுகிறேன்.' என்று கூறியதும், உடனே கூட்டத்திலிருந்த காங்கிரஸ் காலிகள் சிலர், கூக்குரலிட்டு, மேடைமீது கற்களை வீசி கலகம் விளைவித்தனர். கற்களை வீசியதின் விளைவாக, சிறுவன் ஒருவனுக்கு மார்பிலே பலத்த அடிபட்டதைப் பலர் அறிந்ததே யாகும்.

இதன் பின், மேலும் குழப்பம் விளைவிக்கவே, போலீசார் குறுக்கிட்டு, காலிகளை அப்புறப் படுத்தியும், மேலும் குழப்பம் செய்யவே, காரைக்குடி போலீஸ் அதிகாரி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் தலையிட்டு காங்கிரஸ் காலிகளை அடக்கியது அனைவரும் அறிந்ததே.

இதன் விளைவாக ஆத்திரமடைந்த அக்கனபதிகள், அந்தப் போலீஸ் அதிகாரிகள் மீது போலிக் குற்றம் சாட்டி, அவர் ஒரு தி. மு. கழக அனுதாபி என்று கூறி, அவர் மேல் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கண்டிக்க வேண்டும் என்று மகஜர் சமர்ப்பித்து, கடந்த இரண்டு நாட்களாக அவ்வதிகாரி மீது, காரைக்குடி போலீஸ் ஸ்டேஷனில் விசாரணை நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரி ஊரில் இல்லாதபொழுது, காங்கிரசார், போலீஸ் ஸ்டேஷனுக்குப் படையெடுத்து டிப்டியிடம் புகார் செய்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. புகார் செய்ததாகக் கூறப்படும் 'புண்ணியவான்கள்' சட்டையில்லாத மனிதர் சா. கணேசன், மண்டார சன்னதி, (குன்னக்குடி) உள்ளூர் தேசிய டாக்டர்கள் முதலிய பேர் என்று தெரிகிறது.

இதுபோன்று, அன்றாட நிர்வாகத்தில் கூடத் தலையிடத் துணிந்துவிட்டது, ஆச்சாரியார் சர்க்கார்.

குற்றம் செய்தவர்களைத் கண்டிக்காமல் குற்றம் புரிந்தவர்களை அடக்கியதற்காக அவ்வதிகாரிகள்மீது சீறுவது தான் ஜனநாயக ஆட்சியா? இதுதான் 'கீதை காட்டும் வழியா?'

இப்படியே பொதுமக்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் தீமை செய்து கொண்டிருந்தால், ஆச்சாரியார் சர்க்காருக்குக் கூடிய விரைவில் குதர்க்கம் விளையுமே ஒழிய, நன்மை ஏற்படாது என்பதை ஆச்சாரியார் சர்க்காருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் எச்சரிக்கிறேன்.

குறிப்பு:— "போலீசாரின் உதவியால்கூட குழப்பத்தை அடக்க முடியவில்லை"—இந்த நிகழ்ச்சியைப் பற்றி இப்படி எழுதியிருக்கிறது தேசிய இதழான 'தினமணி', (20-10-53) மதுரைப் பதிப்பில். இதிலிருந்து, பொதுமக்கள், ஆச்சாரியார் சர்க்காரின் நேர்மையைப் புரிந்துகொள்ளலாம். இந்த முழு விபரமும் காரைக்குடி வந்தபொழுது என் நண்பர் மூலம் தெரிந்துகொண்டேன்.

சேத் டால்மியா தொழிலகங்களில் ஒரே காலத்தில் சோதனை!

கணக்குப் புத்தகங்கள் கைப்பற்றப்பட்டன! அலுவலகங்களுக்கு 'சீல்' வைக்கப்பட்டன!

'டால்மியா — ஏர்வேஸ்' பற்றியே போலீஸ் நடவடிக்கை!

புதுடெல்லி, நவ. 25—

நாட்டின் பல பகுதிகளிலுள்ள சேத் ராமகிருஷ்ண டால்மியாவின் வர்த்தக நிலையங்களையும், வீடுகளையும், யூனியன் போலீசார், நேற்று ஏக காலத்தில் சோதனையிட்டு கணக்குப் புத்தகங்களையும், குறிப்பேடுகளையும் கைப்பற்றி இருக்கின்றனர்.

டில்லி டிப்டி கமிஷனர் சதீஷ் சந்திரா பிறப்பித்த 25 சோதனை வாரண்டுகள் பேரில் போலீசார் நடவடிக்கை எடுத்தனர். டில்லி, பம்பாய், ராஞ்சி, கல்கத்தா, டால்மியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்களே முக்கியமாக சோதனையிடப்பட்டன.

டில்லியில் சோதனையிடப்பட்ட வர்த்தக நிலையங்களில் சிலவற்றிற்கு முத்திரை வைக்கப்பட்டது. அந்தக் கடைகளின் முன் போலீசார் காவல் புரிந்து வருகின்றனர்.

டில்லியின் டால்மியா ஸ்தாபன நிர்வாகிகள் சிலரது வீடுகளும் சோதனையிடப்பட்டன.

இந்தத் திடீர் சோதனைகள் டால்மியா ஜெயின்—ஏர்வேஸ் வழக்குகள் சம்பந்தமாக நடந்ததாகத் தெரிகிறது.

'மந்திரிசபை மீது நம்பிக்கையில்லை'

தீர்மானம் கொண்டுவர எதிர்க்கட்சியினர் முடிவு

கொழும்பு, நவ 26—

நாளையதினம், சிலோன் மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்று, எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம், விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. இத்திங்கள் 24-ம் தேதி பிரதமர் கொத்தலவாலா அமைச்சர் குழுவின் கொள்கை விளக்கம் பற்றியே, நம்பிக்கையில்லைத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

புதிய தபால் உறைகள்

புதுடெல்லி, நவ. 26—

டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல், புது மாதிரியான, பதிவு செய்வதற்கான உறைகள் தபால் தந்தி இலாகாவினால் வெளியிடப்படும். அந்த உறையின் மீது, அசோகர் தூண் அடையாளம் கோழி முட்டை வடிவில் முத்திரையிடப்பட்டிருக்கும்.

ராஜஸ்தானில் காங்கிரஸ் தோற்றது

ஜெய்ப்பூர், நவ 25—

பான்சுவாரா தொகுதியிலிருந்து இம்மாகாண சட்டசபைக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில்காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. வெற்றி பெற்ற மக்கள் சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த திருமதி யசோதாதேவி 6,000 ஓட்டுக்கள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றார்.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆

உபதேசியின் சொந்த லட்சணம்!

பதவியைக் காப்பாற்ற எடுபிடிகளின் 'ப' வேலை!

சென்னை, நவ 27—

ஆச்சாரியாரின் எதிர் முகாமில் எண்ணிக்கை வளர்கிறது என்பதறிந்து ஆச்சாரியாரின் ஆதரவாளர்கள் அதிர்ச்சியுற்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதை 26-11-53 'ஜனயுகம்' திட்டியிருக்கிறது.

1. ராஜாஜி ஆட்சியிலுள்ள புதிய மந்திரி ஒருவர், ராஜாஜி சர்வாதிகாரத்தை எதிர்க்கும் ஒருசில காங்கிரஸ் அங்கத்தினர்களை இன்று சென்னையில் சந்தித்தது உண்மையா? பொய்யா?

2. ராஜாஜிக்கு பலம் தேடுவதற்கு ஒரு ராஜா, ஒரு பஸ் முதலாளி, ஒரு பத்திரிகை முதலாளி ஆகிய பெரும் பணக்காரர்கள் எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் செலவழிக்க முன்வந்துள்ளது உண்மையா? பொய்யா?

3. சட்டசபையை கலைத்துவிட்டு, மறுதேர்தல் நடத்த ஏற்பாடு செய்தால் கூட ஆதரவுப் படையின் வெற்றிக்காக எவ்வளவு பணம்வேண்டுமானாலும் ஒதுக்கித் தருவதாக வாக்களித்துள்ளது உண்மையா? பொய்யா?

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

‘நான் ஒரு கல் நெஞ்சன்!’

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சகாக்களை மாணிக்கங்கள் என்றே கூறலாம். அம்மாணிக்கங்களைத் தூர எறிந்துவிட முடியாது.”

“யோக்கியதையற்றி சந்தேகத்திற்கு இடமளிக்கும் 30 காங்கிரஸ்காரர்கள் இருப்பதைக் காட்டிலும், யோக்கியதை உள்ள 5 காங்கிரஸ்காரர்கள் இருப்பதையே நான் விரும்புகிறேன்.”

—இவ்வாறு சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார், அண்மையில் தோழிக்கோடு காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், கூறியதாவது :—

“ஒருவருடன் ஒருவர் போட்டியிடடுக் கொண்டிருப்பதுதான் நமது நோக்கமா? அல்லது மக்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த உதவி புரிய வேண்டுமா? மற்றவர்கள் மகஜர்களை கொடுக்கின்றனரா, என்ன செய்கின்றனர் என்பதில் அக்கரை காட்டாதீர்கள்”

“சர்க்கார் ஏதாவது நல்லது செய்ய உத்தேசித்தால், அத்தகவல் எப்படியோ முன்னதாக வெளியாகிவிடுவதால், சர்க்கார் ஏற்கனவே செய்ய உத்தேசித்திருப்பதையே ‘அடைவதற்கு’ எதிர்க் கட்சியினர் ஒரு கிளர்ச்சி ஏற்பாடு செய்து, தங்களால்தான அது கிடைத்ததாக உரிமை கொண்டாடுகின்றனர்; எனவே, நமக்குப் புகழ் கிடைக்க வேண்டுமென்றால, துரிதமாகவும், சரியான முறையிலும நாம் செயல்பட வேண்டும.”

“உதாரணமாக, சில கம்யூனிஸ்டு கைதிகளை விடுவிக்க தீர்மானித்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அதைத் தெரிந்துகொண்டு இன்னாரை விடுதலை செய்யக் கோரி அவர்கள், தந்திமேல் தந்தி கொடுக்கின்றனர். இதனால் தந்திக் கட்டணம் மூலம் மத்திய சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைத்து வருவதை கண்டு நான் மகிழ்கிறேன். ஆனால், அந்தத் தந்திகளால் தான், நான் அந்தக் கைதிகளை விடுவித்திருப்பதாக கூறிவிடுகின்றனர்; அப்பாவிகள் சிலர் அதை நம்பி விடுகின்றனர்.”

“ஒருமுறை சிறை சென்றவர்கள் மறுபடியும் சிறைப்பட விரும்பமாட்டார்கள். தன்னை விடுவிக்கும்படி யாராவது என்னிடம் கேட்டால், சிறைவாசத்தை அவர் விரும்பவில்லை; எனவே அவரை வெளியே விடுவதால் தீங்கு ஏற்படாது என்றே நான் கருதி வருகிறேன். அம்மாதிரி விடுதலை பெறுபவர்கள் காங்கிரசை சட்ட பூர்வமாகத்தான் எதிர்ப்பார்கள்; குற்றம் புரியமாட்டார்கள்.”

“களி மண்ணைக் கொண்டு சட்டி செய்யலாம்; ஆனால், அதை உடைத்து, அதைக் கொண்டே இரு சட்டிகள் செய்ய நினைப்பது மடைமையாகும். சட்டி சரியாக இல்லாவிடில் அதைத் துடைத்து சுத்தம் செய்து பிரகாசிக்க வைக்கவேண்டும். ஸ்தாபனத்திற்குத் திரும்புவோரை சந்தேகக் கண்ணோடு நோக்காதீர்கள்.”

“காங்கிரஸ்காரர்கள், முன்பு ‘கடவுள்’களாக விளங்கி வந்தார்கள். யோக்கியதை குறைய எதையும் செய்யமாட்டார்கள் என்ற கருத்து, பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் வேரூன்றி விட்டது.” என்று பேசி முடித்தார்.

இளமுருகு-பொற்செல்வி

தோழர் இளமுருகு-பொற்செல்வி அவர்களின் அன்னையார் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதால் திருச்சி மாவட்டத்தில் அவர் பேசுவதற்கென ஒப்புதல் தந்துள்ள இடங்களுக்கு வர இயலாதெனத் தெரிவித்துக் கொள்கிறார்.

“நேசன்” எனும் கையெழுத்து இதழின் துவக்க விழா மதுரையில் 14—11—53 அன்று வெ. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

“விசாரணையிலுள்ள வழக்கு பற்றி நீதிபதியிடம் மைசூர் அமைச்சர் குறுக்கிட்டார்”

இது ‘அற்பம்’ என்கிறார் இந்தியப் பிரதமர் நேரு!

பெங்களூர், நவ. 26—

மைசூர் காங்கிரஸ் அமைச்சர் குழுமீது, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் குழுவும், பிரதேச காங்கிரஸ் குழுவும் சாட்டிய குற்றங்கள் அனைத்தும் ‘அற்பமானது’ என்றும், எனவே நடவடிக்கை எதுவும் தேவைப்படவில்லை என்றும் காங்கிரஸ் தலைவர் நேரு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

குற்றச்சாட்டுகளில் முக்கியமானது என்று சொல்லப்படுபவைகளில், விசாரணையில உள்ள வழக்கு ஒன்றில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரிடம் அமைச்சர் ஒருவர் சிபார்சுக்குப் போனதாகவும், பெங்களூரில் நடைபெற்ற கலால் ஏல வருமானத்தை ரத்து செய்ததும், கோலார் மாவட்டத்தில் அம்மணிகிரியில் ஒரு யானை போட்டதும் முக்கிய மானக் குற்றங்களாகும்.

இவ்வளவும் ‘அற்பம்’ என்று காங்கிரஸ் தலைவர் நேரு கூறி, அமைச்சர் குழுவிற்கு அபயம் அளித்துள்ளார். குழப்பம் சில நாளைக்கு நின்று இருக்கும் என்று நம்பலாம்!

தோழர் மு. கருணாநிதிக்கு வரவேற்பும், பாராட்டும்

★

காஞ்சீபுரம்:

“28—11—53 மாலை, காஞ்சிபுரம், கேங்கைகோண்டான் மண்டபம் அருகில் நடைபெறும். மாலை 6 மணிக்கு புகைவண்டி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகள்வழியாக வந்து பொதுக்கூட்டத்தை வந்தடையும்,” என நகரச் செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை:

29—11—53 ஞாயிறு மாலை 3 மணிக்கு எழும்பூர் ரயிலடியிலிருந்து வரவேற்பு ஊர்வலம் புறப்படும்.

மாலை 5 மணிக்கு, எழும்பூர் அழகிரி திடலில் (டி. பி. ஆஸ்பத்திரி அருகில்) வரவேற்புக் கூட்டம் நடைபெறும்.

தி. மு. கழகம்,
சென்னை மாவட்டம்.

****

காஞ்சிபுரத்தில்!

★

காஞ்சீபுரம், பிள்ளையார்பாளையம் திருவேகம்பன் தெருவில், தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில், பல தோழர்கள் கருணாநிதிக்கு வரவேற்புரை வழங்குவர் என்று, நகர தி. மு. கழகம் தெரிவிக்கிறது

பிரஜா-சோஷலிஸ்டுகட்சி தமிழ் மாநில மாநாடு

★

28—11—53, 29—11—53 தேதிகளில் மேற்படி மாநாடு சேலத்தில் போக்ஸ் காம்பவுண்டில் நடைபெறும். ஜே. பி. கிருபளானி தலைமை வகிப்பார். எம். ஆர். தக்கவாதே மாநாட்டை துவக்கி வைப்பார்.

கழகக் கூட்டங்கள்

★

பொன்மலை

மேலக்கற்கண்டார்கோட்டை
28—11—53 சனி மாலை 6 மணிக்கு
இடம்: மே. க. கோட்டை கழக மைதானம்
பேசுவோர்:
சிற்றரசு ஏ. சுப்பிரமணியம்
திருச்சி கேமோறன்

★

பேரணாம்பட்டு

29—11—53 ஞாயிறு மாலை
பேச்சாளர்கள்:
ஏ. எஸ். இமயவரம்பன்
புலவர்—மணிஎழிலன்

★

ஆற்காடு

28—11—53 சனி மாலை 6 மணிக்கு
இடம்: பெரியார் மைதானம்
பேச்சாளர்கள்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
சி. வி. எம். அண்ணாமலை
பொன்னம்பலம்

★

செங்கற்பட்டு

29—11—53 ஞாயிறு மாலை
இடம்: நெல்லுமண்டித் தெரு
தலைவர்: கே. நவநீதநாதம்
பேச்சாளர்கள்:
என். எஸ். இளங்கோ
ஏ. சுந்தரம்

★

பொள்ளாச்சி

29—11—53 ஞாயிறு மாலை
இடம்: தேர்நிலை
பேச்சாளர்கள்:
மதுரை எஸ். முத்து
,, ராஜாமான்
,, எம். ஆர். கணேசன்

வாகை சூடினார்

செம்பியம், நவ. 22—

21—11—53 மாலை 6-30 மணிக்கு தி. மு. க. தோழர் கே. ஜெயராம் என்பவர் (வயது 21) அயன்புரம் நகரசபை பள்ளி மைதானத்தில் (டி. பி. ஆஸ்பத்திரி எதிரில்) 48 மணி நேரம் கடும் மழையிலும், வெயிலிலும் இடைவிடாது சைகிள் சவாரி செய்து வெற்றிபெற்றார். இதற்கு முன் 28—9—53 மாலை 7 மணியிலிருந்து 24 மணி நேரமும், 22—10—53 இரவு 9 மணியிலிருந்து கடும் மழையிலும், வெயிலிலும், இடியிலும் 36 மணி நேரமும் திறம்பட சைகிள்சவாரி செய்து வெற்றி பெற்றார்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

முன் (25-11-53) தொடர்ச்சி	4469—10—5
அக்கிசெட்டிபாளையம் எ அண்ணாமலை	1—0—0
அருகத்துறை குஞ்சு, வேதலிங்கம், சுந்தரம், வை. குஞ்சு ஆகியோர்	2—0—0
அந்தியூர் கு. ராமசாமி	1—0—0
,, தி. மு. கழகப் பொதுக்கூட்ட வசூல்	1—5—0
சதுப்பேரி வி. கே. பெருமாள்	2 14—0
குமாரபாளையம் எ. ராசகோபால்	1—0—0
,, டி. எ. நடேசன்	1—0—0
,, எ. சண்முகசுந்தரம்	1—0—0
,, எம். ஆர். ஆறுமுகம்	1—0—0
,, ஆர். வரதராசன்	1—0—0
,, சி. முத்துசாமி	1—0—0
திருவனந்தபுரம் தி. மு. கழகத் தோழர்களும், வின்சென்ட் தீப்பெட்டி தொழிற்சாலைத் தோழர்களும்	7—6—0
மதுரை ஆர் குருசாமி	2—0—0
,, வி. குருசாமி	2—0—0
,, மா. சண்முகக்கனி	2—0—0
,, முத்துச்சாமி	2—0—0
சி. முட்லூர் கோ. ராமலிங்கம்	1—0—0
,, ப. சிவசங்கரன்	1—0—0
,, தி. சுந்தரபாண்டியம்	1—0—0
,, ஆ. ராமகிருஷ்ணன்	1—0—0
,, சி. ராமகிருஷ்ணன்	1—0—0
,, அ. ஆறுமுகம்	1—0—0
,, சி. விடோபன், சி தங்கராசன்	1—0—0
,, தீ. வேதாந்த தேசிகர்	3—0—0
குல்லக்குண்டு சாமிக்காளை	1—5—0
,, அ. கருப்பையா	1—0—0
,, எஸ் பழனியப்பன்	1—2—0
,, எஸ் நடராசன்	1—0—0
,, ஒரு அனுதாபி	1—0—0
,, எஸ். ராமானுசம்	1—0—0
,, த. பாண்டியன்	1—0—0
,, மூ. துரையப்பன்	1—2—0
,, பெ. சுந்தரராசன்	1—0—0
,, நா. வெங்கடாசலபதி	1—0—0
,, ராஜாமணி, வெள்ளச்சாமி, காலசாமி, முனியசாமி, தங்கச்சாமி, நடராசன், நாராயணசாமி, ஆகியோர்	2—7—0
மம்சாபுரம் மா. ஆண்டியப்பன், பொன்னுசாமி, அய்யாசாமி, மாரியப்பன், சோமசுந்தரம், சீனிப்பன், கனியப்பன், சண்முகசுந்தரம், ராமசாமி, சின்னசாமி, பால்ச்சாமி, அய்யனார், காலசாமி, இருளப்பன், அண்ணாமலை ராசமணி, கணபதி, சந்திரன, இனியன், பெரியசாமி, மலையப்பன், ராமையா, ராமலிங்கம், பாலநாசம், அங்கையா, சாமியப்பன், தங்கராஜ், அய்யனூர், அ. பால்சாமி, நதீந்திரன் முதலியோர்	20—0—0
சேலம்—அம்மாபேட்டை ஏ. சவாதேவன்	5—0—0
,, கே. ஆர். சித்தன்	2—0—0
,, ஈ ஏ. ஆர். ரங்கநாதன்	2—0—0
,, கவிஞர் சி. முருகேசன்	2—0—0
,, எஸ் ஏ. குமாரசாமி	2—0—0
,, வி. சிங்காரம்	2—0—0
,, எம். எம். பழனியப்பன்	1—0—0
,, கே. என். வி தாமோதரம்	1—0—0
,, ஈ. ஏ. ஆர். இருளப்பன்	1—0—0
,, பி. வி சீனிவாசன்	1—0—0
,, என். ஆர் காளிதாஸ், பி கந்தன்	1—0—0
சென்னை—மண்ணடி எம். மதிவாணன்	2—0—0
,, குளை என். அருணாசலம்	2—0—0
,, குளை பி பெரியண்ண நாடார்	1—0—0
சோளிங்கபுரம் தி. மு. கழகம் ஆர். சம்பந்தன்	15—0—0
கள்ளக்குறிச்சி கா. ராமலிங்கனார்	5—0—0
குராப்பள்ளி தி. மு. கழகம்	3—2—0
தர்மபுரி பி. என். பெருமாள்	2—0—0
கோயமுத்தூர் சிக்குராஜு	3—0—0
திண்டுக்கல் ரயில்வே தொழிலாளர்கள்	31—7—0
மதுரை கார்மேகம்	4—0—0
,, என். டி. ராசன்	1—0—0
,, வி. சின்னசாமி	2—0—0
,, ஒரு அனுதாபி	1—0—0
,, ஒரு அனுதாபி	1—0—0
,, கே. என் ஏ. அருணாசலம்	1—0—0
,, முனியாண்டி	1—0—0
,, சி. சண்முகசுந்தரம்	1—0—0
,, வேல்	1—0—0
,, மணி	1—0—0
,, பொ. அருணாசலம்	1—0—0
,, பி. தங்கபாண்டியன்	1—0—0
,, துரைபாண்டி, ஆறுமுகசாமி, தெய்வசிகாமணி, மகாலிங்கம், ராசமாணிக்கம், ஒரு அனுதாபி ஆகியோர்	2—4—0
,, மா. சண்முகம்	1—0—0
காமாட்சிபுரம் பொ. கனி நாடார்	2—0—0
,, வெ. ரத்தினம்	2—0—0
,, மூ. கா. மகாலிங்க நாடார்	2—0—0
,, மா. மூ. அன். அ. தி.	1—0—0
,, கா. பெரியசாமி நாடார்	1—0—0
,, க. மாரியப்ப நாடார்	2—0—0
,, மா. ஞானஒளி நாடார்	1—0—0
,, ஆ. மாசிலாமணி நாடார்	1—0—0
,, ரா. பெரியதம்பி நாடார், மா. தங்கவேல்	1—4—0
ஆகமொத்தம் ரூ.	4659—4—5

கல்லக்குடி அறப் போராட்ட வழக்கு

தோழர்களின் வாக்குமூலங்கள் பதிவாகிவிட்டன

திருச்சி, நவ. 27—

தோழர்கள் கண்ணதாசன், ஏ. பி. தர்மலிங்கம், ஐ. எம். ஷெரீப், ராதாகிருஷ்ணன், ராமதாஸ் உள்ளிட்ட 24 தி. மு. கழகத் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு விசாரணை 23—11—53ல், திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏற்கெனவே 17 தோழர்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்று, மேலும் 7 தோழர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு, முடிவடைந்தது. மறுநாள் இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள் தொடர்ந்தன:

பதினெட்டாவதாக தோழர் ராமதாஸ் கூறியதாவது :—

"நான் ஆதிகுடி பஞ்சாயத்துப் போர்டு உபதலைவர். தி. மு. கழக அனுதாபியல்ல. 1946 ஆண்டு முதல் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினராக இருக்கிறேன்; லால்குடி கிளைக்குக் காரியதரிசி. எனது கட்சிக் கொள்கைக்கு ஏற்ப நான் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை; ஆதரவும் கொடுக்கவில்லை. சம்பவ தினத்தன்று நான் டால்மியாபுரம் செல்லவில்லை. எனது கிராமமான வழுதூரிலிருந்து லால்குடி ரயில்வே நிலயத்திற்கு திருச்சியில் அடுத்த தினம் எனது குமாரத்தியின் பெயர் சூட்டும் வைபவத்திற்கு செல்வதன் பொருட்டு வந்தேன். ரயில் சமயத்தில் வந்தது. எனது நண்பர்களான 'ஜனசக்தி' பத்திரிகை நிருபராகவும், திருமங்கலம் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் பிச்சையும் வண்டியிலிருந்து என்னைக் கூப்பிட்டார்கள். வண்டியில் சிலர் குண்டடிபட்டு காயமாய் இருப்பதாகக் கூறினார்கள். தோழர் நாகுவும், ஸ்டேஷன் மாஸ்டரும் காயமுற்றவர்களை பார்த்தார்கள். அப்போதுதான் எனக்கு டால்மியாபுரத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றிய விவரம் தெரியவந்தது. சாமான் பலகையில் இருந்த மிக அதிகமாகக் காயமடைந்து குற்றுயிராக இருந்த சென்னை [illegible] இரக்க நான் உதவி செய்தேன்.

திருச்சி ஜங்ஷனுக்கு வண்டி வந்ததும், பிளாட்பாரத்தில் ஜில்லா கலெக்டரும், ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டும் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர்கள், [illegible] வைத்துப் பூட்டியிருந்த பெட்டியைத் திறந்தனர். அடுத்த பெட்டியிலிருந்து இறந்துபோன [illegible]யின் பிணத்தைப் பற்றிய விவரம் கேட்டனர். நான் இறந்த நடராசனையும், பலமாகக் காயமடைந்த சேகரனையும் லால்குடி ஸ்டேஷனிலேயே இறக்கிவிட்டதையும், ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதையும் கூறினேன். பிறகு என்னை முதல் பிளாட்பாரத்திற்கு அழைத்துச் சென்றனர். அதிகாரிகள் சில கேள்விகளுக்கு விவரம் கூறி என்னை காவலுக்குக் கொண்டுபோனார்கள். அன்று நான் மாலை 4-30 மணிக்கு கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. [illegible] சட்டத்தின் கீழ் சிறைக்கு அனுப்பப்பட்டேன்."

கோர்ட்டாரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "தாம் டால்மியாபுரத்திலேயே சம்பவம் நடந்த அன்று இல்லையென்றும், தாம் ஒருவரையும் கல்லால் அடிக்கவில்லையென்றும், தன்னை கழக அனுதாபி என்று கூறுவது சரியல்ல" என்றும் கூறினார்.

பத்தொன்பதாவதாக தோழர் பக்காதசாமி கூறியதாவது :—

"[illegible] ஜூலை 14-ந் தேதி கல்லக்குடி திருச்சிக்கு சென்று விஷேமான ஒரு வக்கீல் [illegible]. அடுத்த தினம் 15-ந் தேதி அன்று டால்மியாபுரம் போராட்டத்தைப் பார்க்கச் சென்றேன். முதல் இரண்டு வண்டிகள் வந்தபோது போராட்டம் மிக அமைதியாக இருந்தது. மத்தியானம் 2 மணி சுமாருக்கு திருச்சிக்குத் திரும்பி வீட்டுக்குச் செல்லத் தீர்மானித்து, ஸ்டேஷனுக்குள் சென்று டிக்கட் வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்தேன். லால்குடி ஸ்டேஷனில் வண்டி நின்றபோது, வண்டியில் ஒரு பெட்டியில் சில வைத்தனர் என், அதற்கு அடுத்த பெட்டியில் உட்கார்ந்திருந்தேன். திருச்சி ஜங்ஷன் வந்ததும் கலெக்டரையும், ஜில்லா சூப்பிரண்டெண்டையும் பார்த்தேன்," என்று கூறிவிட்டு, முந்திய தோழர் தெரிவித்ததுபோல, தாம் கைது செய்யப்பட்ட விவரத்தைக் கூறினார்.

கோர்ட்டாரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "தம் கற்களை வீசவோ, பாதையில் படுத்துக்கொள்ளவோ இல்லை என்றும், டிரெயினில் ஏறிய பிறகு தான் கீழே இறங்கவில்லை என்றும், தம்மை அடையாளம் காட்டிய சாட்சிகள், பகிரங்க விசாரணையின்போது தன்னைப் பார்த்தனர்," என்றும் கூறினார்.

இருபதாவதாக தோழர் கோபால கிருஷ்ணன் கூறியதாவது :—

"நான், தி. மு. கழகத்தைச் சேர்ந்தவன்; டால்மியாபுரத் திற்குப் போராட்டத்தைப் பார்க்கச் சென்றேன்: மாலை 2 மணிக்கு திருச்சிக்குத் திரும்பினேன்; டால்மியாபுரத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி விவரங்கள் கூறுமாறு எனனை திருச்சி ஜங்ஷனில் அதிகாரிகள் கேட்டனர்; மறுதினம் மாலைவரை என்னை அவர்கள் ஸ்டேஷனிலேயே வைத்திருந்து கைது செய்தனர்,"

கோர்ட்டார் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "தாம் எந்தச் சின்னத்தையும் அணியவில்லை என்றும், தாம் பாதையில் உட்கார்ந்திருந்ததாகக் கூறுவது பொய்," என்றும் கூறினார்.

இருபத்தோன்றாவதாக, தோழர் கணேசன் கூறியதாவது :—

"நான் ஆதிகுடி பஞ்சாயத்து போர்டு தலைவர்; நான் டால்மியாபுரம் ஹோட்டல் ஒன்றுக்கு பால் எடுத்துச் சென்றேன். 2 மணி வண்டியில் லால்குடி திரும்பினேன். கடைசிப் பெட்டியில் ஏறிக்கொண்டேன். வண்டி புறப்பட்டு, கொஞ்ச தூரம் சென்று, பிறகு நின்றுவிட்டது. துப்பாக்கி வேட்டு சப்தம் கேட்டது. பிறகு வண்டி புறப்பட்டது. லால்குடியில் 18-ம் எதிரி ராமதாஸைக் கண்டேன். அவர், திருச்சி வரை, தன்னுடன் வருமாறு அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். அங்கு போலீசார் என்னை, "இந்தக் கோஷ்டியுடன் வந்தாயா" என்று கேட்டதற்கு 'இல்லை' என்று கூறினேன். நான் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவனல்ல.

கோர்ட்டாரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "தாம் கற்களை வீசவில்லையென்றும், பாதையில் படுத்துக்கொள்ளவில்லையென்றும், தாம், தி. மு. கழக அனுதாபி அல்லவென்றும். அக்கட்சியைச் சேர்ந்தவரல்ல," என்றும் கூறினார்.

"இருபத்திரெண்டாவதாக, தோழர் கருமலை கூறியதாவது :

"நான் சம்பவ தினத்தன்று டால்மியாபுரத்துக்கு வேடிக்கை பார்க்கச் சென்றேன். தொண்டர்களின் மூன்றுவது கோஷ்டி ஸ்டேஷனுக்குள் செல்வதைக் கண்டேன். டிக்கெட் வாங்கிக் கொண்டு திருச்சி டவுனுக்குப் பயணமானேன். வண்டி புறப்பட்டு, சிறிது தூரம் சென்றவுடன் வண்டி நின்றுவிட்டது. துப்பாக்கி வேட்டு சப்தம் கேட்டது. என் முகத்தில் மூன்று இடங்களில் குண்டு பட்டது. முகத்தை கைகுட்டையால் மூடிக் கொண்டேன். வண்டியில்தான் உட்கார்ந்திருந்தேன். லால்குடி ஸ்டேஷனில் அடிபட்டவர்களின் ஜாபிதா தயாரிக்கப்பட்டது. என் முகத்தில் ரத்தம்வருவதைப் பார்த்த அதிகாரிகள் என் பெயரையும் குறித்துக் கொண்டார்கள். திருச்சி டவுனில் இறங்கி வீடு சென்றேன்.

கோர்ட்டாரின், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "தாம் எச் சின்னத்தையும் அணியவில்லை என்றும், பாதையில் படுத்துக் கொள்ளவில்லை என்றும், தன் மீது தடியடிப் பிரயோகம் செய்யப் படவில்லை" என்றும் கூறினார்.

இருபத்திமூன்றாவதாக, தோழர் தர்மலிங்கம் கூறியதாவது :—

"நான் ஜங்கமராஜபுரம் பஞ்சாயத்துபோர்டு தலைவர், திருச்சி ஜில்லா தி. மு. கழகத்தின் காரியதரிசி. கட்சியானது டால்மியாபுரம் ஸ்டேஷன் பெயரை கல்லக்குடி என மாற்ற தீர்மானித்தது. அதற்கும் நேரிடை நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்தது. தோழர் மு. கருணாநிதியைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. அக்கமிட்டி, சாத்வீக முறையில் போராட்டத்தை நடத்த முடிவுகளை தீர்மானித்தது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு திட்டத்தைப் பற்றி அறிவிக்கப்பட்டது. போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் விரிவான திட்டமொன்றும் கொடுக்கப்பட்டது. போராட்டம் ஆரம்பிக்க முடிவு செய்த தேதியிலிருந்து, ஒரு மாத காலமாகப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஜூலை 14-ந் தேதி, லால்குடியில், ஒரு பொதுக்கூட்டம் தோழர் எம. பழனியாண்டி எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்றது. அதில் தோழர்கள்: கருணாநிதி, கண்ணதாசன் முதலியோர் பேசினர். அன்று

கல்லக்குடி அறப்போர்

★

இன்று 137-வது நாள்

இரவே கல்லக்குடியில் நேரடி போராட்டத்தின் திட்டம் வகுக்கப்பட்டது. முதல் இரண்டு வண்டிகள் வந்தபோது, அமைதியாக மறியல் நடைபெற்றது. வேடிக்கை பார்த்தவர்களும் அமைதியாக இருந்தனர். 1-வது எதிரி கண்ணதாசன் தலைமையில் 3-வது தொண்டர்கள் கோஷ்டி வந்தது. வேடிக்கை பார்ப்பதற்காக அங்கு வந்தவர்கள்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். வண்டி வந்தவுடனே போலீசார் சுட்டனர். நாராயணன், சந்தானம், ஜோசப் இவர்களுக்கு குண்டடிபட்டு, கொண்டுவரப்பட்டார்கள். அவர்களைக் காரில் ஏற்றி லால்குடி ஆஸ்பத்திரியில் சேர்த்தேன். லால்குடியில் அடிபட்ட சிலர், ரயிலில் வருவதாகக் கேள்விப்பட்டேன். ஸ்டேஷனுக்குச் சென்று பார்த்ததில் அடிபட்டவர்கள் வெளியிலே உட்கார்ந்திருந்தனர். சம்பவத்தைப்பற்றி ஸ்டேஷன் புகார் புத்தகத்தில் விபரமாக எழுதியுள்ளேன். நான் நடராஜனுடைய உடலைக் கண்டேன்; பின்பு, [illegible] மற்றிருந்த சேகரனையும் பார்த்தேன். இறந்த நடராஜனையும், சேகரனையும் நானும், லால்குடி சப்-இன்ஸ்பெக்டரும் ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். பின்னர் கல்லக்குடிக்குச் சென்று யாவராலும் கவனிக்கப்படாத காயமுற்றவர்களை லால்குடி ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு எடுத்து வந்தோம். நான் காயமுற்றவர்களுக்கு ஒத்தாசையாக இருந்தேன். உடனே கலெக்டரும், ஜில்லா சூப்பிரண்டெண்டும் அங்கு வந்தார்கள். காயமுற்றவர்களைப் பார்த்தார்கள். என்னையும், அடிபட்டவரா எனக்கேட்டனர், நான், 'இல்லை' என்று சொன்னதும், ஜில்லா சூப்பிரண்டெண்டு, என்னை வெளியே போகச் சொன்னார். நான், காயமுற்றவர்களுக்கு ஒத்தாசையாக இருப்பதாகக் கூறினேன். கலெக்டர், அங்குள்ளவர்களைக் கைது செய்யப் போவதாகவும், என்னை வெளியே போகுமாறும் சொன்னார். நான் வெளியிலே சென்றேன். பின்பு கல்லக்குடி சென்றேன். அது முதல் போராட்டத்தை அந்த கட்சி நடத்தி வருகிறேன். ஜூலை 18-ந் தேதி என் தலைமையுடன் போராட்டத்திற்குச்சென்றேன். சுவரொட்டியை ஒட்டினேன். நான் பல கூட்டங்களில் போலீசார் சுட்டதற்குக் காரணம் இல்லையென்று கண்டித்துப் பேசியுள்ளேன். அவர்கள் அந்த மீதி நடந்ததற்கு டெபுடி கலெக்டரும், டெபுடி சூப்பிரண்டெண்டும் தான் காரணமெனவும் கூறியுள்ளேன். என்னை ஜூலை 29-ந் தேதி அரியலூரில் கைது செய்தனர் பகிரங்க விசாரணையில் சாட்சி கூற நான் தயாரயில்லை என்று நான் இன்ஸ்பெக்டரிடம் கூறினேன். அதற்குப் பிறகு தான் என்னைக் கைது செய்தார்கள்.

கோர்ட்டாரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "தாம் கல் வீசவில்லை என்றும் போராட்டத்தை நிறுத்துமாறு கூறப்பட்டபோது, கட்சி அவ்வாறு முடிவு செய்தாலொழிய தாம் அவ்வாறு இயலாதென்று கூறியதாகவும், கூட்டத்தில் தான் இருந்ததாகக் கூறுவது தவறு என்றும், அப்போது கைது செய்யப்பட்ட தொண்டர்களுக்கு உணவளிப்பதில் ஈடுபட்டிருந்ததாகவும், சின்னம் அணிந்து கொண்டு பிளாட்பாரத்தில் நிற்கவில்லை" என்றும் கூறினார்.

இருபத்துநான்காவதாக, தோழர் அருணாசலம் கூறியதாவது :—

"கிளர்ச்சி நடைபெற்ற தினத்தன்று வேடிக்கை பார்ப்பதற்காக, டால்மியாபுரம் சென்றிருந்தேன். முதலில் இருமுறை மறியல் நடந்த பிறகு வீட்டுக்குத் திரும்பிவிட்டேன். மாலை ஒரு மணிக்கு நண்பர்களுடன் உணவு உட்கொள்ள ஓட்டலுக்குச் சென்றேன். மாலை இரண்டு மணிக்கு துப்பாக்கி வேட்டு சப்தத்தைக் கேட்டேன். சில வினாடிகளில் 17-வது எதிரி வெளியே எடுத்துச் செல்லப்பட்டார். நான் அவருடன் திரும்பிவிட்டேன். ஜூலை 29-ந் தேதி டால்மியாபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு வருமாறு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டேன்,"

கோர்ட்டார் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில், "சம்பவம் நடந்த இடத்தில் தான் இல்லையென்றும், கற்களை வீசியதாகக் கூறுவது தவறு என்றும், கழகத்தின் சின்னத்தை அணிந்து கொண்டு நிற்கவில்லையென்றும், தான தி. மு. கழகத்தின், உறுப்பினர் எனவும் கூறினார்.

*   *   *

இரு தரப்பு வழக்கறிஞர்கள் வாதம் நாளை வெளிவரும்.

சைதை தோழர்கள் விடுதலை

20—9—53 அன்று தியாகராய நகரில் ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டி, காங்கிரசாரால் அடிதடிக்குள்ளாகி, கைது செய்யப்பட்டு, ஆறுவாரங்களுக்குப் பிறகு 16—11—53ல், ஒருவாரு தண்டனை அடைந்த சைதை தி. மு. கழகத் தோழர்களான பி. அண்ணாமலை, எஸ் ராஜவேலு, ஆர். எஸ். தம்பி ஆகியோர் 21—11—53ல், விடுதலை அடைந்தனர். சிறைவாயிலில், தோழர்கள் ம. அ. பொன்னுசாமி, முருகேசன், இளங்கோ ஆகியோர் [illegible]ர்.

தென்னிந்தியாவில் சர்க்கரை உற்பத்தி

புதுடெல்லி, நவ. 25—

இப்போது சென்னை மாநிலத்தில் நான்கு சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில், ஒன்றுதான் வேலை செய்கிறது. இது ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 25,000 டன் சர்க்கரை தயார் செய்கிறது. சாதாரணமாக மாநிலத்திற்கு 50,000 டன் தேவைப்படுகிறது.

ஆந்திராவில் 7 ஆலைகள் உள்ளன: இவை 35,000 டன் சர்க்கரை உற்பத்தி செய்யும். ஆனால் அங்கும் தேவை 50,000 டன் ஆகும்.

சென்னை தியாகராயர் கல்லூரியில் புதிய கல்வித் திட்டம் தோல்வி

திட்டம் தோற்றதென தலைவர் அறிவித்தார்

சென்னை, நவ. 25—

17—11—53ல், தியாகராயர் கல்லூரி தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில தோழர் மா. ராசமாணிக்கனார், பி ஓ எல்., தலைமையில், "புதிய கல்வித் திட்டம்" என்பதைப்பற்றி விவாதம் நடந்தது.

இதனை ஆதரித்து மாணவத் தோழர் [illegible]னும், மற்றும் மூவரும் பேசினர்.

பின்னர் மாணவத் தோழர் [illegible], மற்றும் மூவரும் புதிய கல்வித் திட்டத்தின் தீமைகளை நன்கு எடுத்துக் கூறி அதனை எதிர்த்துப் பேசினர்.

விவாதத்திற்குப் பின்னர், தலைவர், திட்டத்தை ஆதரிப்பவர்களைக் கையை உயர்த்துமாறு கூற, பேசினவர்களுடன் ஒரு சிலர் கையை உயர்த்தினர். திட்டத்தை எதிர்ப்பவர்களைக் கையை உயர்த்துமாறு கூற பலர் ஆரவாரத்துடன் கையை உயர்த்தினர்.

தலைவர், திட்டம் தோற்றது என்று கூறி விவாதத்தை இனிது முடித்தார்.

தியாகராயர் கல்லூரி அறிவியல் விஞ்ஞான சபையின் சார்பிலும் 19—11—53 மேற்படி விவாதம் நடந்தது. நீண்ட நேரத்திற்குப் பிறகு, எதிர்த்தவர் பெருவாரியாக இருந்தபடியால் திட்டம் தோற்றதென்று அறிவிக்கப்பட்டது.

இராஜ... முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்கள் [illegible]